# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 094 /2016

ஆணை எண்: 129 /2016

நாள்: 26 /07 /2016

சர்க்கார் சாம குளம் பொதுமக்கள்,
சர்க்கார் சாமகுளம் பேரூராட்சி,
கோயம்புத்தூர் வடக்கு,
கோயம்புத்தூர்– 641 107 — மனுதாரர்

செயல் அலுவலர்,
சர்க்கார் சாமகுளம் பேரூராட்சி,
கோயம்புத்தூர் – 641 107. — எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், சர்க்கார் சாமக்குளம் பேரூராட்சி, ஊர் பொதுமக்களின் நாளிடாத முறையீடு முறைமன்ற நடுவத்தால் பெறப்பட்டு 094/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீடு தொடர்பான உரிய ஆவணங்கள், விசாரணைகள் மற்றும் வாக்குமூலங்கள் ஆகியவைகள் இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், சர்க்கார் சாமக்குளம் பேரூராட்சி பொதுமக்கள் என்ற பெயரில் நாளிடாத முறையீட்டு மனுவில் கோவை மாவட்டம் – வடக்கு சர்க்கார் சாமக்குளம் பேரூராட்சியில் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஒரு சிலர் அடைந்துள்ள மிக மிஞ்சிய வசதி வாய்ப்புகளை

கண்டு பொது மக்கள் மன அளவில் கொதித்தெழுகின்றனர் என்றும், பேரூராட்சி பகுதி பொது மக்களின் வரிப்பணத்தையும், அரசு கஜனாவிற்கு செல்ல வேண்டிய வருமானத்தையும் ஒரு சிலர் (மக்கள் பிரதிநிதிகள்) கொள்ளையடிப்பதை தெரிந்து இதை அரசுக்கு தெரியப்படுத்த வேண்டியது பொது மக்களின் கடமையாகும் என்றும் அதன் அடிப்படையில் தெரிந்த சிலவற்றை தெரிவித்துள்ளனர்:–

(1) <u>மணி (எ) R.விஜயகுமார் மன்ற உறுப்பினர் :</u>

இரண்டு முறை மன்ற உறுப்பினர், சர்க்கார் சாமக்குளம் பகுதியை சார்ந்தவர். இவர் கடந்த ஐந்தாண்டுகளிலும், தற்போதைய ஐந்தாண்டுகளிலும் தனி அதிகாரம் கொண்ட Acting தலைவர்.

இவரின் குடும்பத்திற்கு சொந்தமான கரும்பு ஆலை ஒர்க்ஷாப் ஒன்றை இவரின் தந்தை நடத்தி வந்தார். இவருக்கு என வேறு எந்த தனி சொத்துக்கள் கிடையாது. அந்த ஒர்க்ஷாப்பும் கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்பே மூடப்பட்டு தற்போது கிரில் செய்யும் ஒரு சிறு ஒர்க்ஷாப்பாக செயல்படுகிறது.

இவர் தன் பதவியை பயன்படுத்தியும், Acting தலைவராக செயல்பட்டும் பேரூராட்சியில் வீட்டு மனைக்கு அங்கீகாரம் பெற்று தருவதிலும், குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குவதிலும், டெண்டர் பணிகளிலும் பெரும் ஊழல் செய்து இந்த நான்காண்டில், சுமார் 50 இலட்சம் மதிப்பில் தனி பங்களா, அதற்கென பல இலட்சங்களில் நிலம் வாங்கியது. சொகுசு கார், பல இடங்களில் நிலம் வாங்கி வெவ்வேறு பெயர்களில் கிரையம் செய்துள்ளார். பல இலட்சங்கள் செலவு செய்து தற்சமயம் தன் மகன், மகள் இருவரின் திருமணங்களை மிக ஆடம்பரமாக நடத்தியுள்ளார். பெரிய அளவில் வரதட்சணைகளும் கொடுத்துள்ளார்.

(2). <u>C.ரெங்கசாமி – துணைத் தலைவர் :</u>

இவர் மூன்று முறையாக பேரூராட்சி மன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். இந்த முறை துணைத் தலைவராக பதவி பெற்றுள்ளார். இவர் எப்போதும் அடாவடித்தனமான செயல்பாடுகள் தான். செயல் அலுவலரை மிரட்டுவது, அலுவலகப் பணியாளர்களை மிரட்டுவது மன்றத்திற்குள் குடிபோதையில் கலாட்டா செய்வது இவரின் தனி வழி..

கவுன்சிலர் பதவி தான் தொழில். இவருக்கு வேறு தொழிலோ, வருமானமோ கிடையாது. இரண்டு ஏக்கர் காட்டு பூமி உள்ளது. அதில் எந்த காலத்திலும் விவசாயம் செய்யப்பட்டது கிடையாது. அந்த பூமியும் அப்படியே உள்ளது.

ஆனால் இவருக்கு ஊரே வியந்து பேசும் அளவிற்கு

(i) அன்னூர் – மேட்டுப்பாளையம் ரோட்டில் சுமார் 1 1/2 கோடி ரூபாய் மதிப்பில் தோட்டம்.

(ii) வடவள்ளி – பெரியபுத்தூர் செல்லும் சாலையில் சுமார் 2 கோடி ரூபாய் மதிப்பில் தோட்டம்

(iii) பேரூராட்சி எல்லைக்குள் – வீட்டு மனை அங்கீகாரம் பெற்ற நில உரிமையாளர்களிடம் – ரிசர்வ் சைட் உட்பட தன் குடும்ப உறுப்பினர்களின் பெயர்களில் பெறப்பட்டுள்ள தலா 5செண்ட் வீதம் மொத்தம் 17 சைட்டுகள் (காலியிடம்). ஒவ்வொன்றும் சுமார் 20 இலட்சம் மதிப்புள்ளது.

(iv) ஆடம்பர வாழ்க்கை, சொகுசு கார்.

(v) தற்போது குரும்பாளையம் கிராமத்தில் சுமார் 3 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு வரும் பங்களா

(3) <u>தேவராஜ் – மன்ற உறுப்பினர் :</u>

இவருக்கு குடும்ப சொத்து என முன்பு எதுவுமே இல்லை. பேரூராட்சி பஸ் நிலையத்தில் சைக்கிள் ஸ்டேண்ட் ஏலம் எடுத்து நடத்தி வந்தார்.

இவர் இந்த முறை கவுன்சிலராக வெற்றி பெற்ற பின் கடந்த நான்காண்டில் சுமார் 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் பங்களா, அதற்கான இடம் பல இலட்சத்தில் வாங்கியுள்ளார்.

(4) <u>சுரேந்திரன் – மன்ற உறுப்பினர் :</u>

இவருக்கு வேறு எந்த வகையிலும் சொத்தோ, வருமானமோ கிடையாது. ஆனால் பேரூராட்சி மன்ற உறுப்பினர் ஆன பின் இவரும் சுமார் 30 இலட்ச ரூபாய் மதிப்பில் வீடு, கார், ஆடம்பர வாழ்வு பல இடங்களில் நிலம் என தன் பங்குக்கு முடிந்த வரை சொத்து சேர்த்து உள்ளார்.

(5) <u>திருமதி.கவிதா – பேரூராட்சி தலைவி :</u>

இவர் தன் தந்தை சுப்பையன் கண்காணிப்பில் செயல்பட்டு வருகிறார். அதிகமாக அலுவலகத்திற்கே செல்ல மாட்டார். Acting தலைவர் விஜயகுமார் பார்த்து பிரித்து கொடுக்கும் தொகைகளை பெற்றுக் கொள்வார். பேரூராட்சி மூலம் வரும் கமிஷன் தொகைகளை பெற்றுக் கொள்வார். இவருக்கென எப்போதாவது – வீட்டுமனை அங்கீகாரம் பெறும் நில உரிமையாளர்களிடம் இருந்து ஒரு சைட் அல்லது இரண்டு சைட்கள் கொடுக்கப்படும். ஆனால் கடந்த ஆண்டில் தன் தந்தை சுப்பையன் அரசு பணியிலிருந்து பணி ஓய்வு பெற்று நேரடியாக பேரூராட்சி நிர்வாகத்தில் தலையிடுவதால் கொள்ளையில் பெரும் பங்கு தற்போது தலைவிக்கும் வந்து கொண்டிருக்கிறது.

மீதமுள்ள 10 கவுன்சிலர்களில் 6 பேர் பெண்கள் இதில் சரிபாதி தாழ்த்தப்பட்ட சமூகத்தை சார்ந்தவர்கள். இவர்களுக்கு அவ்வப்போது பல ஆயிரங்களை மட்டும் கொடுத்து விடுவார்கள்.

மீதமுள்ள 2 கவுன்சிலர்கள் இவர்கள் அடிக்கும் கொள்ளை செயல்களை கண்டு பிடித்து சண்டையிட்டால் லட்சங்களோ, பல ஆயிரங்களோ கொடுத்து அவர்களின் வாயை அடைத்து விடுவார்கள். இவர்களும் கிடைத்தது லாபம், விட்டால் இதுவும் போய்விடுமென வாங்கிக் கொள்கிறார்கள். இவர்களின் மூலம் சில விபரங்கள் பொது மக்களுக்கு தெரிய வந்துள்ளது.

(6) <u>பேரூராட்சி நிர்வாகத்திற்கு Acting தலைவர் விஜயகுமார் – மன்ற உறுப்பினர்:</u>

பேரூராட்சி பகுதிகளில் எங்கு வீட்டு மனைக்கு அங்கீகாரம் பெறுவதென்றாலும்–இதற்கென ஏஜெண்டாக நியமிக்கப்பட்டுள்ள துணைத்தலைவர் ரங்கசாமியை அவரின் இல்லத்திற்கு சென்று பேசி முடிக்க வேண்டும். இவர் ஏக்கருக்கு 10 லட்சம் முதல் 15 லட்சம் வரை பெற்றுக் கொண்டு அதில் பகுதிக்கு மேல் இவர் எடுத்துக் கொண்டு மீதியை இவ்வளவு தான் பெறப்பட்டது என சொல்லி அதிலும் ஒரு பங்கை எடுத்துக் கொண்டு மீதியை மற்றவர்களுக்கு மேலே குறிப்பிட்ட நால்வருக்கும் கொடுத்து விடுவார். பிறகு இவர் ரிசர்வ் சைட்டிலும் ஒரு பகுதியை தன் குடும்ப உறுப்பினர்கள் பெயரில் கிரையம் பெற்றுக் கொள்வார்– துணைத்தலைவர். இதெல்லாம் போதாதென்று அனைத்து கவுன்சிலர்களும் தங்கள் வார்டுகளில் அடிக்கடி குடிநீர் குழாய் உடைந்ததாகவும், நிலத்தடி – போர்வெல் மோட்டார் பழுதடைந்ததாகவும் மாதம் மூன்று முறை பொய்யான பில் கொடுத்து பேரூராட்சியில் பெரும் தொகை பெற்று வருகிறார்கள். இதுபோக டெண்டர் கமிஷன் வேறு.

2. மனுதாரரின் முறையீடு தொடர்பாக சர்க்கார் சாமக்குளம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் விளக்க அறிக்கை கோரப்பட்டது. செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ள விவரம் பின்வருமாறு:–

இப்பேரூராட்சியின் மன்றத்தலைவர், துணைத்தலைவர், புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள வார்டு உறுப்பினர்கள் 2006 முதல் நாளது தேதி வரை மக்களின் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுடைய கோரிக்கைகளை பெற்றும் மக்களின் அடிப்படை வசதிகளுக்காக பேரூராட்சியினுடைய செயல் அலுவலரிடம் முறையிட்டு பொதுமக்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்து வருகிறார்கள். மேற்கண்ட நபர்களின் மீது அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக

அளிக்கப்பட்ட புகார் மனுவே தவிர உண்மையான புகார் மனு அல்ல. மேற்கண்ட நபர்கள் மீது வேறு எந்தவிதமான புகார்களும் நாளது வரை பெறப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

மேலும், பேரூராட்சி மன்றத் தலைவர், துணைத்தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களின் விளக்கங்களையும் பெற்று சமர்ப்பித்துள்ளார். தனியர்கள் தங்களின் விளக்க அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளனர்.

<u>மணி என்கிற விஜயகுமார் – வார்டு உறுப்பினர் தெரிவித்துள்ள விளக்கம்:–</u>

தலைவர் என ஒருவர் இருக்கையில் Acting தலைவராக நடந்து கொள்ளவில்லை. பேரூராட்சியின் வளர்ச்சியினை குறித்து அவ்வப்போது நாங்கள் கலந்து ஆலோசிப்பது உண்டு எனவும், பேரூராட்சிக்குட்பட்ட குரும்பபாளையம் பகுதியிலிருந்து சர்க்கார் சாமக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட குடிநீர் பிரச்சனை தொடர்பான புகார் மனுவில் இணைக்கப்பட்டுள்ள பொதுமக்கள் கையெழுத்துப் பிரதியை நகல் எடுக்கப்பட்டு இணைத்து அனுப்பியுள்ளார்கள். மேலும் என்னுடைய மகன் வி.ஸ்ரீதரன் B.E.பட்டப்படிப்பினை முடித்து 2009–லிருந்து சாப்ட்வேர் பொறியாளராக தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். அந்த வருமானத்திலும், என் தந்தை வழி சொத்தினை விற்று அதன் மூலமும், என் மகன் பெயரில் வீட்டு மனையிடம் வாங்கி உள்ளூர் கனரா வங்கியில் கடன் பெற்று வீடு கட்டி உள்ளார். அதில்தான் நான் குடியிருந்து வருகிறேன். இது தவிர புகாரில் கூறியபடி என் பெயரிலோ, வேறு எவர் பெயரிலோ சொத்துக்கள் கிடையாது. உள்ளூரில் எனக்கும் அவப்பெயர் ஏற்படுத்த வேண்டும் என கெட்ட நோக்கத்தோடு இப்புகாரை தெரிவித்து இருக்கிறார்கள் என்ற விவரத்தினை தெரிவித்துள்ளார்.

<u>சுரேந்திரன் வார்டு உறுப்பினர் தெரிவித்துள்ள விளக்கம்:–</u>

எனது பெயரினை கெடுக்கவும் மற்றும் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவும் இதுபோல் புகார் வரப்பெற்றுள்ளது. அதில் உள்ள கையெழுத்துக்கள் யாவும் உண்மை இல்லை. அது வேறு ஏதோ காரணத்திற்காக பொதுமக்களிடம் பெறப்பட்ட கையெழுத்துக்களின் நகல் . இதற்கு தவறுதலாக பயன்படுத்தப்பட்டுள்ளது. நான் எனது குடியிருப்பிற்காக தனியாரிடம் கடன் பெற்றும் மனைவியின் பெயரிலிருந்த இடத்தையும் நகைகளையும் விற்பனை செய்து மனைவியின் பெயரில் வீடு வாங்கப்பட்டது. அவ்வாறு வாங்கப்பட்ட வீட்டினை வேண்டுமென்றே பேரூராட்சி உறுப்பினர் ஆனபிறகு சொத்து சேர்த்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வங்கியின் கடன் மூலமும் நான் செய்து வரும் ரியல் எஸ்டேட் தொழில் மூலம் வரபெற்ற வருமானத்தை கொண்டு வாங்கப்பட்ட காரினை தவறுதலாக பேரூராட்சி உறுப்பினர் ஆனபிறகு பதவியை பயன்படுத்தி வாங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>திருமதி.எஸ்.கவிதா – பேரூராட்சி மன்றத் தலைவர் தெரிவித்துள்ள விளக்கம்:</u>

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் குரும்பாளையம் ஊர் பொதுமக்கள், குடிநீர் விநியோகம் செய்யும் முறையில், குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவதிலும், துணைத்தலைவர் தவறாக நடந்து கொண்டதால், அவ்வூர் பொதுமக்களிடம் கையெழுத்து பெற்று சர்க்கார் சாமக்குளம் பேரூராட்சிக்கும் மற்றும் மேலிடத்திற்கும் புகார் மனு கொடுத்துள்ளார்கள். அந்த புகார் மனுவில் உள்ள கையெழுத்தை புகைப்படம் நகல் எடுத்து வேண்டாதவர்களும் என்மீது புகார் மனு கொடுத்துள்ளார்கள்.

<u>திரு.M.தேவராஜ் – வார்டு கவுன்சிலர் தெரிவித்துள்ள விளக்கம்:</u>

(1) சர்க்கார் சாமக்குளம் பேரூராட்சியில் கடந்த 2006–ம் ஆண்டு முதல் 13வது வார்டில் உறுப்பினராக பொதுப்பணி புரிகிறேன். அதன் காரணமாகவே என்மீது அரசியல்

காழ்ப்புணர்ச்சியுடனும் வரும் தேர்தலில் என்னை எப்படியாவது தோற்கடிக்க வேண்டும் எனவும் கருதி இவ்வாறான பொய் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

(2) எனது குடும்பத்தில் நான் பேரூராட்சி மன்ற உறுப்பினர் ஆவதற்கு முன்பே எவ்வளவு சொத்துக்கள் உள்ளன என்ற விவரம்:-

(i) எனது தாயார் திருமதி.விஜயலட்சுமி என்பார்களின் பெயரில் கொண்டையம்பாளையம் கிராமம் க.ச.எண்.195/1 எல் 2.50 ஏக்கர் பூமி.

(ii) எனது தந்தை திரு.மனோகரன் பெயரில் உயில் சாசனம் எண்.101/94 28.12.1994-ன்படி காட்டம்பட்டி கிராமம் ஊர் நத்ததில் வீடு அதனை சார்ந்த காலியிடம் அதே உயில் சாசனத்தின் படி கொண்டையம்பாளையம் கிராமம் க.ச.எண்.194-ல் 2.10 ஏக்கர், சர்க்கார் சாமக்குளம் பேரூராட்சி வார்டு எண்.14, டேங்க் வீதி பகுதியில் எனது தந்தை திரு.மனோகரன் பெயரில் கடந்த 15 வருடமாக உள்ள 2000 சதுரடியில் அமைந்துள்ள வீடு

(iii) இலுப்ப நத்தம் கிராமம் எனது பெயரில் க.ச.எண்.722-ல் கிரையப்பத்திரம் எண்.4059/27/07/2005-ன் படி 4.33 ஏக்கர் பூமி

(iv) சர்க்கார்சாமக்குளம் பேரூராட்சி க.ச.எண்.320/1ஏ-ல் 4 செண்ட் 229 ச.அடி. கிரையப்பத்திரம் எண்.3812/2010/1914/2010-ன்படி பெறப்பட்ட இடத்தில் நான் வங்கியில் பெறப்பட்ட கடன்மூலம் கட்டப்பட்ட வீடு.

(v) எனது தாயார் பெயரிலிருந்த பூமியில் ஒரு பகுதியை விற்பனை செய்து எனக்கு கொடுத்த பங்கில் வாங்கப்பட்டதாகும் நான் வைத்தள்ள கார். மேலும், நான் 1995 முதல் சொந்தமாக கார் வைத்து T.V.S.50 இரண்டு சக்கர வாகனம் ஷோரூம் வைத்து நடத்தி வந்துள்ளேன்.

(v/) எனது பெயரில் அளிக்கப்பட்ட புகாரில் உள்ள கையொப்பங்கள் யாவும் ஏற்கனவே பேரூராட்சிகளில் குடிநீர் பிரச்சனைக்காக கொடுக்கப்பட்ட கையொப்பங்களின் நகலை இப்புகார் மனுவில் இணைத்து கொடுத்துள்ளார்கள் புகார் கொடுத்த நபர்கள் உங்கள் பெயரில் புகார் கொடுக்கவில்லை என தெரிவித்து கொடுத்துள்ள கடிதத்தினை இக்கடிதத்தில் இணைத்துள்ளேன்.

இது தவிர நான் பேரூராட்சி மன்ற உறுப்பினர் பதவியில் இருந்தாலும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன்.அதில் வரும் வருமானத்தை கொண்டு எனது குடும்பத்தினை நடத்தி வருகிறேன்.

முதலமைச்சர் தனிப்பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட புகார் மனுவில் உள்ள விஷயங்கள் யாவும் பொய்யாக தயாரிக்கப்பட்டுள்ளது அதில் உண்மை என்பது இல்லை என உறுதியாக கூறுகிறேன். ஆகையினால் அவ்வாறு புகார் அளித்தவர்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

திரு.சி.ரங்கசாமி – மன்றத் துணைத்தலைவர் தெரிவித்துள்ள விளக்கம்:–

நான் வார்டு எண்.7–ல் சுயேச்சை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு 3வது முறையாக கடந்த நான்கு ஆண்டுகளாக, சர்க்கார்சாமக்குளம் பேரூராட்சியில் துணைத்தலைவராக இருந்து வருகிறேன். நான் கடந்த நான்கரை ஆண்டுகளாக எனது வார்டில் எல்லா விதமான பணிகளையும் செவ்வனே செய்து கொடுத்துள்ளேன். என்னுடைய செயல்பாடுகளை கண்டு என்னுடைய பெயருக்கு களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில சில சமூக விரோதிகளும், அரசியல் கட்சியை சார்ந்தவர்களும் மேலிடத்திற்கு பொய்யான புகார் மனு கொடுத்துள்ளார்கள்.

இந்த புகார் மனு பொதுமக்களிடம் வேறு ஏதோ ஓர் மனுவிற்காக பெறப்பட்ட கையெழுத்து பிரதியை நகல் எடுத்து சர்க்கார்சாமக்குளம் பேரூராட்சிக்கும் மற்றும் மேலிடத்திற்கும் புகார்

மனு கொடுத்துள்ளார்கள். அந்த புகார் மனுவில் உள்ள கையெழுத்தை புகைப்படம் நகல் எடுத்து ஒரு சில சமூக விரோதிகளும், அரசியல் கட்சியை சேர்ந்தவர்களும், எனக்கு வேண்டாதவர்களும், சேர்ந்து என் மீது புகார் மனு கொடுத்துள்ளார்கள். இதை தாங்கள் நேரிடையாக விசாரணை செய்து கொள்ளலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், எனது மனைவி பெயரில் உள்ள சொத்துக்களுக்கு கீழ்க்கண்ட விளக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

(i) எங்களுக்கு தோட்டம் ஒன்று உள்ளது. இது வங்கியில் நகை கடன் மூலமும், நான் ஏற்கனவே மில்லில் பணியாற்றி விருப்ப ஓய்வு அடைந்ததன் மூலம் சேமநல தொகை கிடைக்கப்பெற்றதன் மூலமும் கிடைக்கப்பெற்றது.

(ii) எனது மனைவி பெயரில் காடு ஒன்று உள்ளது. இது எனது மனைவியின் தாய் தந்தை மூலம் கிடைக்கப்பெற்றது.

(iii) எனது மனைவி பெயரில் 10 செண்ட் நிலம் மனை ஒன்று உள்ளது. இது எனது பாட்டி வகையிறாக்கள் பாகம் அளித்தது. தோட்டம் வருமானம் மூலம் பெறப்பட்டது.

(iv) பழைய கார் ஒன்று ஏற்கனவே இருந்தது. இது அடிக்கடி பழுது அடைந்து வந்ததால் அதனை விற்று வந்த தொகையையும், சுந்தரம் பைனான்சிஸ் மூலம் கடன் பெற்றும் பெறப்பட்டது.

(v) எங்களுக்கு பழைய வீடு ஒன்று இருந்தது. இதனை புதுப்பிக்க நினைத்து யூனியன் வங்கியில் கடன் பெற்றதன் மூலமும், தோட்டம் வருமானம் மூலமும், கருவேப்பிலை நர்சரி பால்பண்ணை வருமானம் மூலமும், எனது வீடு புதுப்பிக்கப்பட்டு வருகிறேன்.

மேலும், அன்பு ரியல் எஸ்டேட் பிசினஸ் நடத்தப்பட்டு வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். இதில் பெறும் வருமானத்திற்கு 3 ஆண்டுகளுக்கு வருமானவரி செலுத்தப்பட்டு வருகிறேன். எனவே இவ்வாறு பொய்யான புகார் மனு அளித்து அரசு அலுவலர்களின் பளுவை ஏற்படுத்தும் நபர்களை அடையாளம் கண்டு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

3. மேற்கூறிய முறையீடு புகார் மனு மற்றும் அப்புகார் மனு மீது பெறப்பட்ட செயல் அலுவலர் விளக்க அறிக்கை, தனியர்களின் விளக்க அறிக்கை ஆகியவைகளின் மீது மேற்கொள்ளப்பட்ட பரிசீலனைக்குப் பின் செயல் அலுவலர் நேரில் விசாரிக்கப்பட்டார். 30.06.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையின் போது செயல் அலுவலர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:–

> "நான் சர்க்கார் சாமக்குளம் பேரூராட்சியில் செயல் அலுவலராக கடந்த ஓராண்டு காலமாக பணிபுரிந்து வருகின்றேன். பேரூராட்சியினுடைய தலைவி துணைத்தலைவர் மற்றும் சில மன்ற உறுப்பினர்கள் மீது குற்றச்சாட்டு சுமத்தி அனுப்பப்பட்ட முறையீட்டு மனுவில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். இது குறித்து என்னால் 31.03.2016 அன்றும் 03.05.2016 அன்றும் அறிக்கை சமர்ப்பித்துள்ளேன் என தெரிவித்துக்கொள்கிறேன். 31.03.2016 நாளிட்ட அறிக்கையோடு புகாருக்கு உள்ளான 2வது வார்டு உறுப்பினர், 12வது வார்டு உறுப்பினர், பேரூராட்சி மன்ற தலைவர், 13வது வார்டு உறுப்பினர், பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் ஆகியோரிடம் உரிய விளக்கம் பெற்றும் அனுப்பியுள்ளேன். குரும்பபாளையம் பகுதியிலிருந்து குடிநீர் பிரச்சனை சம்பந்தமாக பொதுமக்கள் என்னை வந்து பார்த்தார்கள். அதனுடைய அடிப்படையில் இந்த புகார் மனு எழுதப்பட்டுள்ளது. தற்போது குடிநீர் பிரச்சனை இல்லை. பேரூராட்சி நிர்வாகங்கள் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. புகார் மனுவில் தெரிவித்துள்ளது எதுவும் உண்மையில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்". மேலும், கொங்குநகர் பகுதியில் மோட்டார் மூலம் குடிநீர் தொட்டிக்கு தண்ணீர் நிரப்பப்பட்டு அந்த பகுதிக்கு தண்ணீர் வழங்குவதை தெரிவிக்கும் "வாட்ஸ்அப்" செய்தியை செயல் அலுவலர், முறைமன்ற நடுவத்திடம் காண்பித்தார். அதில் செயல் அலுவலருடன் ஒரு நபர் இருப்பது தெரிய வந்தது. அது யார் என்று விளக்கம் கேட்டபோது அது பேரூராட்சி தலைவியினுடைய தந்தை

என்று குறிப்பிட்டிருந்தார். விசாரணையில் பேரூராட்சி தலைவி அலுவலகத்திற்கு வருவதில்லை. அவரது தந்தையே பேரூராட்சி தலைவராக செயல்படுகிறார். பொதுமக்கள் தேர்ந்தெடுத்த திருமதி. கவிதா அவர்களைத்தான், அவரது தந்தையை அல்ல என்பதை செயல்அலுவலரிடம் சுட்டிக்காட்டப்பட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒருவர் பினாமிகள் வைத்து செயல்படக்கூடாது என்று அவருக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

4. இம்முறைமன்றம் உரிய விசாரணை வாக்குமூலங்கள் அடிப்படையிலும் பேரூராட்சி செயல் அலுவலர் விளக்க அறிக்கையின் அடிப்படையிலும், 2வது வார்டு உறுப்பினர் மணி (எ) விஜயகுமார், 12வது வார்டு உறுப்பினர் ப.சுரேந்திரன், பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி.எஸ்.கவிதா, மற்றும் சி.ரங்கசாமி, மன்றத் துணைத்தலைவர் என்பார்களிடம் தனித்தனியே பெறப்பட்ட விளக்க அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டன. பொது மக்கள் என குறிப்பிடப்பட்டு அளிக்கப்பட்ட முறையீட்டு புகார் மனுவிற்குரிய ஆதாரமாக ஆவணங்கள் ஏதும் பெறப்படவில்லை.

5. 30.06.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையின்போது சர்க்கார் சாமக்குளம் பேரூராட்சியில் கொங்குநகர் பகுதியில் தண்ணீர் வழங்குவதை தெரிவிக்கும் 'வாட்ஸ் அப்' செய்தியை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களிடம் சமர்ப்பிக்கும்போது அந்த வாட்ஸ்அப் செய்தியில் செயல் அலுவலருடன் ஒரு நபர் இருந்தது பேரூராட்சி தலைவியின் தந்தை என்று கண்டறியப்பட்டு பேரூராட்சி பொதுப்பணிகளில் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், பினாமிகள் வைத்து செயல்பட கூடாது என்பதை செயல் அலுவலரிடம் சுட்டிக் காட்டப்பட்டு அறிவுரை வழங்கப்பட்டது.

6. மேலும், உள்ளாட்சி பிரதிநிதிகளிடம் தனித்தனியே பெறப்பட்ட விளக்க அறிக்கையின் அடிப்படையிலும் செயல் அலுவலரின் விளக்க அறிக்கையின் அடிப்படையிலும் புகார் மனுவிற்குரிய ஆதாரங்கள் இல்லை மற்றும் பொதுமக்கள் என்ற பெயரில் மனு இருந்தது எனக்கருதி புகார் மனுவினை தள்ளுபடி செய்யலாம் என இம்முறைமன்றம் தீர்மானித்து தள்ளுபடி செய்து ஆணையிடுகிறது.

2016–ம் ஆண்டு ஜுலை திங்கள் 26–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்:

செயல் அலுவலர்,
சர்க்கார் சாமகுளம் பேரூராட்சி,
கோயம்புத்தூர் – 641 107.